[24th March 1959

SRI S. M. ANNAMALAI : ஸார், இந்த கடன்களை மட்டும் வசூலிக்காமல் சென்ற ஆண்டு சேர வேண்டிய பாக்கியையும் சேர்த்துவசூலிக்கிறார்கள். இந்த ஆண்டு பாக்கியை வசூலிக்காமல் தள்ளிப்போடுவது போல, சென்ற ஆண்டுத் தொகையைக்கூட ஒத்திப்போட சர்க்கார் முன் வருவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : இப்படி எல்லாவற்றையுமே ஒத்திப்போட்டு விட்டால், எல்லாம் சேர்ந்து ரொம்ப பளுவாகி விடும். அதனால்தான் ஓரளவுக்கு சலுகை கொடுக்கிற முறையில் இந்தத் தவணையை ஒத்தி வைத்திருக்கிறோம்.

SRI V. K. RAMASWAMY MUDALIYAR : Is there any proposal before the Government to postpone the collections in the drought-affected areas in the districts like Ramanathapuram and Tirunelveli?

THE HON. SRI M. A. MANICKAVELU : Yes, Sir, with regard to season-affected areas in the State, already orders have been issued in regard to districts like Ramanathapuram, South Arcot and Tiruchirappalli and orders will be issued in regard to one or two other districts also.

Rural Water-supply Scheme in Tirunelveli District

* 980 *Q.*—SRI R. SRINIVASA IYER (on behalf of SRI A. R. SUBBIAH MUDALIAR) : Will the Hon. the Minister for Revenue be pleased to state the amount spent till the end of 1958 for the Rural Water-supply Scheme in the Tirunelveli District?

THE HON. SRI M. A. MANICKAVELU : Rs. 1,92,745 from 1st April 1952 to 31st December 1958 (excluding the Tiruchendur-Kayalpatnam Water-supply Scheme).

MR. SPEAKER : We shall take up Question Nos. 981 and 982 later as the concerned Minister has not yet come.

Vacancies in the posts of headmasters and teachers in schools

* 982-A *Q.*—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state the number of posts of headmasters and teachers that are vacant in the Government primary, lower secondary and high schools of Shencottah taluk, Tirunelveli district and Cape district?

THE HON. SRI C. SUBRAMANIAM : No post of headmaster or teacher in any of the Government primary or lower secondary or high schools in the transferred areas is now vacant.

SRI K. SATTANATHA KARAYALAR : ஸார், இந்த நடுத்தரப்பள்ளி உபாத்தியாயர்கள், குறிப்பாக தமிழ் பண்டிதர்கள், இரண்டாண்டுகளாக நியமிக்கப்படாமல் இருக்கின்ற பள்ளிகள் இருக்கின்றனவா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : My information is that no post is vacant. If the hon. Member brings to my notice any particular instance, I shall look into it.

24th March 1959]

SRI T. S. RAMASWAMY PILLAI : அங்கே ஹெட்மாஸ்டர்களுடைய கிரேடைக் குறைத்திருக்கிறார்கள் என்ற தகவல் வந்திருக்கிறது. அதைப் பற்றிய விவரங்கள் என்ன ?

THE HON. SRI C. SUBRAMANIAM : கிரேட் ஒன்றும் குறைய வில்லை. எப்போதும் போல் செலக்ஷன் கிரேட், ஆர்டினரி கிரேட் என்று இரண்டு கிரேடுகள் இருக்கின்றன.

SRI K. SATTANATHA KARAYALAR : அங்கு இருக்கக்கூடிய பள்ளிகளில் சாதாரணமாக முதல் கிரேடு ஹெட்மாஸ்டர்களைத்தான் நியமிப் பார்கள். குறிப்பாக எஸ்.எல்.பி. பள்ளிக்கூடத்தில் இதுவரையில் முதல் கிரேடு ஹெட்மாஸ்டர் இருந்து இப்போது இல்லாமல் இருப்பது அரசாங்கத் திற்குத் தெரியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : இதைப்பற்றி தனிக் கேள்வி போடவேண்டும்.

SRI T. T. DANIEL : May I know, Sir, whether it is a fact that the number of gazetted headmasters' posts has been reduced after the integration?

THE HON. SRI C. SUBRAMANIAM : I want notice, Sir.

Indian National Awards for Teachers

* 982-B Q.—SRI K. SATTANATHA KARAYALAR : Will the Hon. the Minister for Finance be pleased to state the method of selection that is followed for the Government of India National Award for Teachers?

THE HON. SRI C. SUBRAMANIAM : The award is given to the best teacher under each of the two categories, Elementary and Secondary. The selection for the award is made at three stages. First, the District Committee, constituted for the purpose, with the District Educational Officer as Chairman and the headmaster of a training school and the headmaster of a secondary school as members, selects two teachers under each category and reports their names to the State Committee. The State Committee consisting of the Director of Public Instruction as Chairman and the Vice-Chancellor, Madras University, and the Principal, Teachers', Training College, Saidapet, as members, selects, from among the teachers recommended by the District Committees, three teachers under each category and reports their names to the State Government. The State Government forward the names to the Government of India, together with their recommendation. The Government of India then select one teacher under each category for the award.

SRI K. SATTANATHA KARAYALAR : இந்த அவார்டு கொடுக்கப் படுவதின் காரணமாக அவர்களுக்கு உத்யோகத்துறையில் ஏதாவது சலுகை காட்டப்படுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : உத்யோகத்துறையில் சலுகைக் காட்டுவதற்காக கொடுக்கப்படுவதில்லை. அவர்கள் செய்யக்கூடிய சேவையை பாராட்டுவதற்காகத்தான் இந்த சிறப்புகள் வழங்கப்படுகின்றன.